IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 107/2018

Deposition of Witness : DW 1

Name : மோகன் (வயது – 52)

Father's Name /W/o : த/பெ வெள்ளைக்கண்ணு

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : ஓச்சலம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 12.11.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. வழக்கறிஞர் ஆணையர் எந்த தேதியில் என் இடத்தை அளக்க வந்தார் என்றால் ஞாபகமில்லை. எத்தனை முறை வழக்கறிஞர் ஆணையர் வந்தார் என்றால் 2 முறை வந்தார். முதல் முறை ஏன் அளக்க முடியவில்லை என்றால் என் வழக்கறிஞர் வரமுடியவில்லை. 2 ஆவது முறை என் வழக்கறிஞர் வந்தாரா என்றால் வந்தார். யார் வந்து அளவீடு செய்தார் என்றால் சர்வேயர், வழக்கறிஞர் ஆணையர் வந்து அளந்தார்கள். கிராம நிர்வாக அலுவலர் வந்தாரா என்றால் இல்லை. சர்வேயர் அளக்கும்போது நானும் என் வழக்கறிஞரும் இருந்தோமா என்றால் இருந்தோம்.

2.அளவீடு செய்யும்போது வாதியின் சொத்தில் வடக்கு 2.0 மீட்டர் தெற்கு 1.8 மீட்டர் நான் ஆக்கிரமிப்பு செய்ததாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வடக்கு சிமெண்ட் ரோடு மற்றும் தெற்கு கால்வாய் உள்ளது அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை. மேற்படி விபரத்தை வழக்கறிஞர் ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை தெரிவித்துள்ளேனா என்றால் தெரியாது.

3. என் சொத்தின் சர்வே எண் மற்றும் வாதி சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 126/8 என்னுடையது மடற்றும் 126/9 வாதியுடையது. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை எந்த தேதியில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் வழக்கறிஞர் மேற்படி விபரத்தை தெரிவித்தாரா என்றால் இல்லை. என் சொத்திற்கும் மற்றும வாதியின் சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். ஒரே சர்வே எண் ஆனால் உட்பிரிவு வேறு.

4. வழக்கு நிலுவையில் இருந்தபோது வழக்கு சொத்தில் வீடு கட்டியது தவறு என்றால் இல்லை. நான் வழக்கிற்கு முன்பு கட்டினேன். என் பிரமாண வாக்குமூலத்தில் 10.11.1997 தேதியிட்ட ஆவணம் 1997 ஆம் ஆண்டு வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 1971 ஆம் ஆண்டு என்ன ஆவணம் என்றால் தாய் பத்திரம் ஆகும். நான் எவ்வளவு நாட்களாக அங்கு வசித்து வருகிறேன் என்றால் 11 வருடமாக வசித்து வருகிறேன். 2017 ஆம் ஆண்டிற்கு முன்பே வீடு கட்டினேனா அல்லது பின்பு கட்டினேனா என்றால் முன்பு கட்டினேன். குடிநீர் கட்டண வரி ரசீது 2016 ஆண்டிற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வீடு கட்டியதற்கு முன்பே நான் செலுத்தினேன் என்றால் வீடு கட்டுவதற்கு குடிநீர் அமைத்து கட்டணம் செலுத்தினேன். மேற்படி விபரம் பொய் என்றால் சரியல்ல.

5. என் பெயரில் உள்ள மின் கட்டண அட்டை 2014 ஆம் ஆண்டிற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வீடு கட்டுவதற்கு முன்பே மின் கட்டண அட்டை வாங்கினேன் என்றால் அப்போது நான் வீடு கட்டி முடித்துவிட்டேன். 10.11.1997 விற்பனை ஆவணத்திற்கு உண்டான பட்டா இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பட்டா நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான அடங்கல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்திற்கு அ– பதிவேடு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்தேன்.

6. மேற்படி சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன். நான் சொல்வது பொய் என்றாலும் என் பெயரில் பட்டா எதுவும் இல்லை என்றாலும் 1997 ஆம ஆண்டு பத்திரம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**